நகர், சதாசிவ நகர், வண்டியூர், சௌராஷ்டிராபுரம், இந்திரா நகர் போன்ற பகுதிகளில் மிகுந்த துர்நாற்றம் அடிப்பதால் அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதனை சீர்படுத்தி, செம்மைப்படுத்தி செய்ய பாதாள சாக்கடை மூலமாக கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, கழிவு நீரைப் பொறுத்தவரையில், oil, grease, B.O.D., floating solid, dissolved solid, suspended solid என்று பல பொருள்கள் அதில் இருக்கின்றன. அவை தரையில்வெளியே வருகிற நேரத்தில் துர்நாற்றம் அடிக்கிறது. அதுமட்டுமல்லாமல் அதனால் பல தொல்லைகளும் ஏற்படும். ஆகவே அதற்காக ஒரு 'செப்டிக் டாங்க்' ஏற்படுத்தி அதற்குள் அந்தக் கழிவுநீரை விட வேண்டும்.

(முற்பகல் 10–00)

சில நாட்களுக்குப் பிறகு, அந்த B. O. D. Contents தெரிந்ததற்குப் பிறகுதான் வெளியேற்ற வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்—

Uner Section 26 of the Water Prevention and Control of Pollution Act, 1974, the Unit has to obtain the consent of the Board to discharge the effluents.

அவர்களுக்கு அந்த கன்செண்ட், அந்த அனுமதி மறுக்கப்படக்கூடிய அளவிற்கு, உத்தரவு போடக்கூடிய அளவிற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது கணக்குக் குழு

திரு. என் .எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் மூன்று அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:—

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான வருவாய் வரவினங்கள் அறிக்கைகளில் வனம்-மீனளத் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1986 ஏப்ரல் 30] [டாக்டர் எச். வி. ஹண்டே]

(ஆ) 1979–80 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையில் ஊரக வளர்ச்சித் துறை தொடர்பான பத்தி எண் 3.12—பணிக்கான ஊதியத்தை உணவுப் பொருளாக வழங்கும் திட்டம் குறித்த மேற்படி குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை.

(இ) 1981–82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (சிவில்) தொழிலாளர் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தி நான்காவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பில், கீழ்க்கண்ட அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:—

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) தொழில் துறை பற்றிய பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளையும், அவற்றின் மீதான தணிக்கை அறிக்கைகளையும் சட்டமன்றத்தில் வைப்பதில் ஏற்படும் கால தாமதம் குறித்த மேற்படி குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கை.

6. வரவு செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு
[தொடர்ச்சி.]

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை,

(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

(இ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

(ஈ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவரித் துறை, மாவட்ட நிர்வாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—ஆகியவை பற்றிய மானியக் கோரிக்கைகளின் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள், வருவாய்த் துறையினுடைய பல்வேறு ஆக்கப் பணிகள் பற்றியும், வருவாய்த் துறை மேற்கொண்ட மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றியும், இது பற்றிய சீரமைப்புப்